# தினசரி சந்தை தகவல்கள் - வெற்றிக்கதை

கி.விருபக்ஷி

த/பெ.எண்.சந்திரசேகரப்பா

கோலூர் ,அந்தர்ஹல்லி அஞ்சல்

டோட்டபள்ளபூர் தாலுக்கா

பெங்களூர் மாவட்டம்

கர்நாடகா

அலைபேசி: 09008802811



**முன்னுரை:**

என் பெயர் திரு.விருபக்ஷி, த/பெ எண்.சந்திரசேகரப்பா, வயது 42 கோலூர் கிராமம், அந்தர்ஹல்லி அஞ்சல், டோட்டபள்ளபூர் தாலுக்கா. இது தலைநகர் பெங்களூரில் இருந்து 50 கி.மீட்டர் தொலைவில் டோட்டபள்ளபூர் தாலூக்காவின் வடக்கு பகுதியில் அமைந்துள்ளது. நான் 8ம் வகுப்புவரை படித்துவிட்டு பின்பு விவசாயத்தில் ஈடுபட ஆரம்பித்தேன். நான் இதில் 28 வருடங்களாக விவசாயம் செய்து வந்த போதிலும், கடந்த 10 வருடங்களாகத்தான் சிறப்பாக செயல்பட்டு வருகிறேன்.

**பயிர் உற்பத்தி:**

எங்களுக்கு 10 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. அந்த 10 ஏக்கர் முழுவதும் நான் ஆழ்துளை கிணறு மூலமாக நீர்பாசனம் செய்து வருகிறேன். எனது நிலம் இரண்டு வகையான மண் வகையைக் கொண்டது. 6 ஏக்கர் செம்மண்பூமி, மீதம் 4 ஏக்கர் மணல் பாங்கான பூமி. இதில் முக்கியமாக பயிர் செய்வது வாழை, தீவனப்பயிர்கள் மற்றும் கிட்ரியோடோரா. எனது 10 ஏக்கர் நிலத்தில் 4 ஏக்கர் வாழை, 3 ஏக்கர் தீவனப்பயிர்கள் மற்றும் 3 ஏக்கர் சிட்ரியோடோரா உள்ளது. வாழை முக்கியமான பொருளாதார பயிர். ஆகையால் அதிக முக்கியத்துவம் கொடுத்து மணல் பாங்கான பூமியில் பயிர் செய்து வருகிறேன். ஜி - 9 ரக திசு வளர்ப்பு முறையில் வளர்க்கப்பட்ட வாழையை தேர்வு செய்து, தேவன் ஹல்லியில் உள்ள குக்கழி பயோடெக் நிறுவனத்திடமிருந்து ஒரு நாற்று 12 ரூபாய் என்ற விகிதத்தில் வாங்கி பிப்ரவரி - மார்ச் மாதங்களில் நடவினை மேற்கொண்டேன். நடவிற்கு முன்னால் சட்டி கலப்பை கொண்டு நிலத்தை உழுது 2 x 2 என்ற அளவில் குழி எடுத்து 7 x 6 என்ற இடைவெளிகளில் ஒரு ஏக்கரில் 1000 கன்றுகளை நடவு செய்தேன். பண்ணை கழிவு குப்பையினை 1 ஏக்கருக்கு 10 வண்டி என்ற அளவில் செடி நடவு செய்த 4லிருந்து 5 வது நாளில் வயலில் இட்டேன். பின்பு வேப்பம் புண்ணாக்கு செடிக்கு 1/2 கிலோ என்ற விகிதத்தில் 45ம் நாளில் கொடுக்கப்பட்டது. பயிர் வளரும் பருவத்தில் பொட்டாஷ் மற்றும் டி.ஏ.பி 50 கிராம் / பயிருக்கு என்ற அளவில் கொடுக்கப்பட்டது. 17:17:17 - 1/2 கிலோ பயிருக்கு என்ற அளவில் பழங்கள் வரும் சமயங்களில் கொடுக்கப்பட்டது. 2-3 தடவை பூச்சிக்கொல்லி மருந்து தெளிக்கப்பட்டது. எம்.45 பவுடர் மற்றும் டேஷ் போன்ற மருந்துகளை தெளித்தேன். பெரும்பாலான நேரங்களில் எனது குடும்ப உறுப்பினர்களே விவசாய பணிகளை மேற்கொண்டனர்.

தேவைப்பட்ட நேரங்களில் நாங்கள் வெளியில் இருந்து தொழிலாளர்களை அமர்த்தினோம். 11-12 மாதங்களுக்கு பிறகு பழங்கள் அறுவடைக்கு வந்தன.

**விற்பனை:**

நான் எனது பொருள்களை டோட்டபள்ளபூர் வாழை மண்டியில் விற்றுவந்தேன் மண்டியின் உரிமையாளர்கள் எனது பொருள்களுக்கு விலையை நிர்ணயிப்பதால் விற்பனை முழுவதும் அவர்களின் கையில் இருந்தது. விளைபொருட்களின் வரத்து அதிகமாக இருக்கும் சமயங்களில் அவர்கள் விலையை குறைத்து விடுவார்கள். வரத்து குறைந்து தேவை அதிகரிக்கும் சமயங்களில் கூட, நாங்கள் உரிய விலையைப் பெற முடியாது.

**தினசரி சந்தை நிலவரத்தின் மூலம் லாபகரமான விவசாயம்:**

நான் டோட்டபள்ளபூர் மாநில தோட்டக்கலை துறை அலுவலகத்திற்கு அடிக்கடி சென்று வருவேன். ஒரு நாள் நான் கே.ஆர் சந்தை ஆய்வாளர் ஸ்ரீகாந்த்துடன் தோட்டக்கலை அலுவலர் சிவானந்த் அவர்களையும் சந்தித்தேன். அவர் எனக்கு தினசரி சந்தை தகவல் முறையை அறிமுகப் படுத்தினார். இது விவசாயிகளுக்கு மிகவும் உபயோகமானது. மேலும் அவர் தினசரி சந்தை தகவல்களை இணையதளம் வழியாக எப்படி பெறுவது என்பது பற்றியும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் மின் விரிவாக்கத்துறை பற்றியும் அது விவசாயிகளின் நலனுக்காக எவ்வாறு செயல்பட்டு கொண்டு இருக்கிறது என்பது பற்றியும் கூறினார். அவர் எனது அலைபேசி வழியாக குறுந்தகவல்களை பெறுவது பற்றியும் கூறினார். இப்பொழுது நான் வாழையில் மொத்த

மற்றும் சில்லறை விலையினை அலைபேசியில் பெற்று வருகிறேன். இதுமட்டும் இல்லாமல் மேலும் சில உபயோகமான தகவல்களையும் நான் அறிந்து கொண்டேன். கே.ஆர். சந்தையின் தினசரி நடவடிக்கைகளான சந்தையின் வகை, ஏலவகை, ஏலநேரம் மற்றும் பணம் வழங்கும் முறை போன்றவற்றையும் அறிந்துகொண்டேன். அதுமுதல் நான் உள்ளூர் சந்தை மற்றும் கே.ஆர் சந்தையின் விலையை ஒப்பிட தொடங்கிவிட்டேன். இரண்டு சந்தையின் விலைகளுக்கும் வேறுபாடு இருந்தது. பின்னர் நான் கே.ஆர்.பெங்களூர் சந்தையின் விலை அதிகமாக இருக்கும் பொழுது எனது பொருள்களை அந்த சந்தைக்கு அனுப்பத் தொடங்கினேன். இதன் மூலம் நான் முன்பை காட்டிலும் அதிக லாபம் பெற முடிந்தது. பின்பு விவசாயம் என்பது, பொருள்களை அதிகவிலை கிடைக்கின்ற சந்தையில் விற்பனை செய்யும் பொழுதுதான் லாபகரமானது என்பதை நான் அறிந்து கொண்டேன். அதற்கு தினசரி சந்தை நிலவர இணைய தளம் மற்றும் தினசரி குறுந்தகவல்கள் பெரிதும் உதவி புரிகிறது.

இணையதளம் மூலமாக பெறும் இத்தகைய தகவல்கள் எங்களுக்கு மிகவும் உபயோகமானதாக உள்ளது. இதில் மொத்த மற்றும் சில்லறை விலையும் உள்ளது. நாங்கள் நல்ல விலை கிடைக்கும் சமயங்களில் அறுவடையினை மேற்கொள்கிறோம். இதனால் விவசாயம் முன்பை விட லாபகரமானதாக உள்ளது. எனது வாழ்க்கை தரம் உயர்ந்துள்ளது. எதிர்காலத்தில் நான் தினசரி சந்தை நிலவரத்தையும் அதன் சேவைகளையும் நன்கு பயன்படுத்திக் கொள்வேன். நான் எனது கிராமத்தில் உள்ள எல்லா விவசாயிகளுக்கும் இதனை பரிந்துரை செய்தேன். நான் கோவை வேளாண்

பல்கலைக்கழகத்திற்கும் தினசரி சந்தை நிலவரத்திற்கும் எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.